## அருளகம் திருக்கூட்டம்
## Arulagam Thirukkuuttam

Arulagam was created in February 2015 by a group of seekers eager to understand and practise the valuable teachings of our ancient sages.

The group is led by Ayyaa Loganaden Sornum. Free classes are held every Wednesday online or at the Tamil League, Reduit.

Everybody is welcome.
Please contact Ayyaa Sornum on 5 731 9156 if you wish to join.

**www.arulagam.com**





# அருள் விருந்து பாடல்கள்

# ARUL VIRUNDHU PAADALGAL

**Arulagam Thirukkuuttam**
**April 2024**

# 1. தமிழ்த்தாய் வாழ்த்து
## TAMIZHTTHAAI VAAZHTTHU

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடர்நல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!

உன் சீரிளமைத் திறம்வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!!
வாழ்த்துதுமே!!!

Niiraarung kadaluduttha nilamadandhaik kezhilozhugum
Siiraarum vadhanamenat thigazhbaradhak kanndamidhil
Tekkanamum adhitrsirandha Draavidanal thirunaadum
Takkasiru pirainudhalum tharitthanarun thilagamumea
Aththilaga vaasanaipohl anaithulagum inbamura
Etthisaiyum pugazhmanakka irundhaperun Tamizhanangea
Tamizhanangea!

Un siirilamait thiramviyandhu
Seyalmarandhu vaazhtthudhumea!
Vaazhtthudhumea!
Vaazhtthudhumea!

## 2. திருக்குறள் (அதிகாரம் 1) THIRUKKURAL (Adhigaaram 1)

### குறள் 1 – Kural 1 – Verse 1

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

Agara mudhala ezhuththellaam aadhi
Pakavan mudhatre ulaku

### குறள் 2 – Kural 2 – Verse 2

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

Katradhanaal aaya payanen kol vaalarivan
Natraal thozhaaar enin

---

## 3. SONG FOR INNER PURIFICATION

ஓம் நமசிவாய
ஓம் நமசிவாய
ஓம் நமசிவாய
சிவாய நம ஓம்

AUM Namasivaya
AUM Namasivaya
AUM Namasivaya
Sivaya Namah AUM



## 4. குருவுக்கு வணக்கம் SALUTATION TO GURU

ஓம் குருநாத ஜெய குருநாத
ஜெய குருநாத சத்குரு நாத
சத்குரு நாத சிவ குருநாத
சிவ குருநாத ஓம் குருநாத

Om gurunatha jaya gurunatha
Jaya gurunatha satguru natha
Satguru natha siva gurunatha
Siva gurunatha om gurunatha

---

## 5. திரு இரட்டை மணி மாலை THIRU IRATTAI MANI MAALAI

திருவாக்கும்; செய்கருமம் கைகூட்டும்; செஞ்சொல்
பெருவாக்கும், பீடும் பெருக்கும்; உருவாக்கும்;
ஆதலால், வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

Thiruvaakkum seikarumam kaikkuttum senjsol
Peruvaakkum, Biidum perukkum uruvaakkum
Aadhalaal vaanohrum aanai mugattaanaik
Kaadhalaal kuuppuvar tham kai.

## 6. கோளறு பதிகம்
## KOHL ARU PADIGAM

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன் மிக நல்ல வீணை தடவி

மாசறு திங்கள் கங்கை முடி மேல் அணிந்து என் உளமே புகுந்த அதனால்

ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி பாம்பிரண்டும் உடனே

ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல அடியாரவர்க்கு மிகவே!

Veyuru tholi pangan, vidam unda kandan, miga nalla veenai thadavi,
Masaru thingal, gangai mudi mel aninthu en ulame pugunda adhanal,
Jnayiru, thingal, chevvai, budhan , vyazhan Velli, sani , pambirandum udane,
Aasaru nalla, nalla avai nalla, nalla adiyar avarkku migave.

---

## 7. திருவிளக்கு ஏற்றல்
## THIRUVILAKKU EAHTTRAL

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே.

Illaga vilakkathu irul keduppathu
Sollaga vilakkathu sohthi yullathu
Pallaga vilakkathu palarung kaaNpathu
Nallaga vilakkathu namachi vaayavey.



ஒளிவளர் விளக்கே! உலப்பிலா ஒன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்குநம் தேனே!
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

Olivalar vilakkae ulappilaa onrea
Unarvusuuzh kadandhador unarvea
Thelivalar palingin thiralmanik Kunrea
Sitthatthul thitthikkum theanea
Alivalar Ullatthu aanandhak kaniyea
Ambalam aadarang kaaga
Velivalar dheivak kuuthugan dhaayait
Thondanean vilambumaa vilambea

---

## 8. விநாயக அகவல்
## VINAYAGA AGAVAL

அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டி
தாயாய் எனக்குத் தாளனந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்து

Attrpudham ninra kattpagak kalirea
Muppazha nugarum muussiga vaagana
Ippozhu dhennai aatkolla veandi
Thaayaai enakkut thaanen dharuli
Maayaap piravi mayakkam arutthu

## 9. அரசமரத்தடி வாழும்
## ARASA MARATTHADI VAAZHUM

அரசமரத்தடி வாழும் ஆதிகஜானன ரூப .
அருகம் புல்லை அருளும் எங்கள் பிள்ளையார் அப்பா.
கலை நிறை கணபதி சரணம் சரணம்.
கஜமுக குணபதி சரணம் சரணம்
கணபதி நாதா சரணம் சரணம்.
கண நாயகனே வரணும் வரணும்

Arasa maratthadi vaazhum ...aathi gajaanana roopa.
Arugam pullai arulum engal pillaiyaar appa .
Kalai nirai ganapathi saranam saranam .
Gajamukha gunapathi saranam sarnam.
Ganapathi naada saranam saranam.
Ganaanaayagane saranam saranam (2)

---

## 10. பிடியதன்
## PIDIYADHAN

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடி கணபதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே!

Pidiyadhan uruvumai kolamigu kariyadhu
Vadikodu thanadhadi val.ipadum avaridar
KadigaNa padhivara arulinan migukodai
Vadivinar payilvali valamurai iraiyea



## 11. ஐந்து கரத்தனை
## AINDHU KARATTHANAI

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம் பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன் தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

Aindhu karatthanai yaanai mugatthanai
Indhin ilampirai Pollum eyittranai
Nandhi magandhanai gniaanak kozhundhinaip
Pundhiyil vaitthadi pohttrugin reanea



## 12. கைத்தல நிறைகனி
## KAITHTHALA NIRAIKANI

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
  கப்பிய கரிமுக ......…………………….............னடிபேணிக்

கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
  கற்பக மெனவினை .......…...............................கடிதேகும்

மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
  மற்பொரு திரள்புய .......……...........................மதயானை

மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
  மட்டவிழ் மலர்கொடு .......…......................பணிவேனே

முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
  முற்பட எழுதிய ......………….................முதல்வோனே

முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
  அச்சது பொடிசெய்த .......…..................................அதிதீரா

அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
  அப்புன மதனிடை ......………...............................இபமாகி

அக்குற மகளுட னச்சிறு முருகனை
  அக்கண மணமருள் ......….......................…பெருமாளே.



Kaiththala niraikani appamodu avalpori
  Kappiya karimugan .....…………………………………Adipeni

Katridum adiyavar buddhiyil uraibava
  Karpagam enavinai .....…………………………..Kadidhegum

Maththamum madhiyamum vaiththidum aranmagan
  Marporu thiralbuya ......……………………………..Madhayanai

Maththala vayiranai uththami pudhalvanai
  Mattavizh malarkodu………………………………… .Panivene

Muththamizh adaivinai murpadu girithanil
  Murpada ezhudhiya …………………………………Mudhalvone

Muppuram eriseydha acchivan urairatham
  Acchadhu podiseydha ....…………………………....Athidheera

Aththuyar adhukodu subbira manipadum
  Appunam adhanidai ……………………………………Ibamagi

Akkura magaludan acchiru muruganai
  Akkanam manamarul…………………………………..Perumale.

# 13. மலர் வழிபாடு
## MALAR VAZHIPAADU (FLOWER WORSHIP)

1 ஓம் எனும் பொருளாய் உள்ளோய் போற்றி ஓம்
AUM ennum porulai ulloy pohtri aum

2 பூமனும் பொருள் தொறும் பொலிவாய் போற்றி ஓம்
Poomanum porul thorum polivay pohtri aum

3 அகரம் முதலென ஆனாய் போற்றி ஓம்
Agaram mudalena aanay pohtri aum

4 அகர உகர ஆதி போற்றி ஓம்
Agara ugara Aadi pohtri aum

5 மகரமாய் நின்ற வானவ போற்றி ஓம்
Magaramay ninra vaanava pohtri aum

6 பகர் முன்னவனாம் பரனே போற்றி ஓம்
Pagar munnavanaam baranae pohtri aum

7 மண்ணாய் விண்ணாய் மலர்ந்தாய் போற்றி ஓம்
Mannay vinnay malarnday pohtri aum

8 கண்ணுள் மணியாய்க் கலந்தாய் போற்றி ஓம்
Kannul maniyay kalandaik pohtri aum

9 நீர்தீக் காற்றாய் நின்றாய் போற்றி ஓம்
Neerteek kaatraay ninray pohtri aum

10 கார்குளிராக கனிந்தாய் போற்றி ஓம்
Kaarkuliraaga kaninday pohtri aum



11 பகலவன் நிலவாய் பரந்தாய் போற்றி ஓம்
Pagalavan nilavaay paranday pohtri aum

12 நிகர்மீன் கணமாய் நிலைத்தாய் போற்றி ஓம்
Nigarmeen kanamaay nilaittaay pohtri aum

13 மழைபொழி இமய வல்லிசேய் போற்றி ஓம்
Mazhaipozhi imaya vallisey pohtri aum

14 தழைசெவி எண்தோள் தலைவ போற்றி ஓம்
Tazhaisevi enthol talaiva pohtri aum

15 திங்கட் சடையோன் செல்வ போற்றி ஓம்
Tingat sadaiyoan selva pohtri aum

16 எங்கட் கருளும் இறைவா போற்றி ஓம்
Engat karulum iraiva pohtri aum

---

# 14. திருநாவுக்கரசர் தேவாரம்
## THIRUNAVUKKARASAR THEVARAM

**திருவதிகை வீரட்டானம் பாடல் 6**
**Thiruvadigai Vīraṭṭānam - Verse 6**

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன் தமிழோடிசை பாடல் மறந்தறியேன்

நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன் உன்னாமம் என் னாவில் மறந்தறியேன்

உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய் உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்

அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில வீரட்டா னத்துறை அம்மானே.

Salam puvodu dubam marrantariyen Thamizhodu isai paadal marantariyen Nalam Theengilum unnai marrantariyen Un naamum yen naavil marrantariyen Ulandhaar thalaiyil balikkondu uzhalvaai Udalull urrusulai thavirtarulaay
Alanthen adiyen adhikaik kekila Veerattaanaturrai ammaane

## அன்னம் பாலிக்கும்
**Annam Palikkum**

அன்னம் பாலிக்குந் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்குமோ இப் பிறவியே

Annam palikkum thillaic citrambalam
Ponnam palikku[m] melum ip pu misai
Ennam palikkumaru kandinbura
Innam palikkumo ip piraviye.

---

## 15. அருட் பெரும் ஜோதி
## ARUT PERUM JYOTI

அருட் பெரும் ஜோதி
அருட் பெரும் ஜோதி
தனி பெரும் கருணை
அருட் பெரும் ஜோதி

Arut Perum Jyoti
Arut Perum Jyoti
Thani Perum Karunai
Arut Perum Jyoti



## 16. திருநாவுக்கரசர் தேவாரம்
## THIRUNAVUKKARASAR THEVARAM

**திருஅங்கமாலை (பாடல்கள் 1 & 2)**
**Thiru Anga Maalai (Verses 1 & 2)**

தலையே நீவணங்காய் (x2)
தலை மாலை தலைக்கணிந்து (x2)
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீவணங்காய்.

Thalaiyae nee vanangaai (x2)
Thalaimaalai thalaikaninthu
Thalaiyaalae palitherun thalaivanai
Thalaiyae nee vanangaai

கண்காள் காண்மின்களோ - கடல்
நஞ்சுண்ட கண்டன்றன்னை
எண்டோ ள் வீசிநின் றாடும் பிரான்றன்னைக்
கண்காள் காண்மின்களோ.

Kangaal kaan mingaloo
Kangaal kaan mingaloo
Kadal nanjunda kandandrannai
Endoozh veesi nindraadum piraandrannai
Kangaal kaan mingaloo

---

## 17. மந்திரமாவது நீறு
## MANTHIRAMAVATHU NEERU

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே

Manthiramaavathu neeru, Vanavar Melathu Neeru,
Sundaram aavathu neeru , thuthikka paduvathu neeru,
THandiram aavathu neeru, Samayathil ullathu neeru
Senthuvar vaay umai pangan thiru Aalavayan Thiru neere.

## 18. மங்கள பாடல்
## SONG OF BENEDICTION

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணில் நல்லதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்தத

Mannil nalla vannam vazhalaam vaigalum
Ennil nalla gadikki yadhumor kuraivilaik
Kannil nallaqdhu urun kazhumala valanagarp
Pennil nallalodum perunthakai yirundhadhe

---

## 19. போற்றித் திருவகவல்
## POHTTRI THIRU AGAVAL (LINES 164-165)

தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

Thennadudaiya sivaney pohtri !
Ennattavarkum Iraiva pohtri !



## 20. சிவபுராணம் (LINES 1-16)
## SIVAPURANAM (LINES 1-16)

### திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க

Namasivaya vaazhga, Nadan thal ,vaazhga,
Imai pozhudum yennenjil neengaadhan thal vaazhga
Kokazhi aanda guru manithan thaal vaazhga,
Agamam aagi nindru annippan thaal vaazhga,
Egan anegan iraivan adi Vaazhga

வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

Vegam keduthaanda vendhanadi velga,
Pirapparukkum pingnagan than pey kazhalgal velga,
Puratharkkum sehyon than puung kazhalgal velga,
Karangkuvivaar ul magizhum kohn kazhalgal velga,
Sirangkuvivaar ohnguvikkum siirohn kazhal velga.

ஈசனடி போற்றி எந்தை அடி போற்றி
தேசனடிபோற்றி சிவன்சே அடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி

Eesan adi Pohtri Yenthai adi Pohtri
Desanadi Pohtri, Sivan Sevadi Pohtri
Neyathey nindra nimalan adi Pohtri
Maayap pirapparukkum mannan adi Pohtri
siiraar perunthurai nam devan adi Pohtri
Aaratha inbam arulum malai pohtri

---

## 21. போற்றித் திருவகவல் (135-141) SIVAPURANAM (135-141)

மான்நேர் நோக்கி மணாளா போற்றி
வானகத்து அமரர் தாயே போற்றி
பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி

Manner nokki manala pohtri
Vanagaththu amarar thaye pohtri
Paridai aindhaip parandhay potri
Niridai nangai nigazndhai pohtri
Thiyidai munrait thigazndhai pohtri
Valiyidai irandai magizndhai pohtri
Veliyidai onrai vilaindhai pohtri



## 22. ஆனந்த ஆதீதம் AANANDHA AADIIDHAM

பாட வேண்டும்நான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்கு
ஆட வேண்டும்நான் போற்றி அம்பலத்து ஆடு
நின்கழற் போது நாயினேன்
கூட வேண்டும்நான் போற்றி இப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீட வேண்டும்நான் போற்றி வீடுதந்து
அருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே.

Padavendum naan pohtri ninnaiye
Padinaindhunaindhu urugi nekkunekku
Adavendum naan pohtri ambalathu aadu
Nin kazhar podhu nayinen
Kudavendum naan pohtri yippuzuk
Kudu nikkenaip pohtri poyyelam
Vidavendum naan pohtri viidu tandu
Arulu pohtri nin meyyar meyyane.

---

## 23. நீத்தல் விண்ணப்பம் NIITTHAL VINNAPPAM

**பாடல் 1**

கடையவனே எனைக் கருணையினால் கலந்து, ஆண்டுகொண்ட

விடையவனே, விட்டிடுதி கண்டாய்? விறல் வேங்கையின் தோல்

உடையவனே, மன்னும் உத்தரகோசமங்கைக்கு அரசே,

சடையவனே, தளர்ந்தேன்; எம்பிரான், என்னைத் தாங்கிக்கொள்ளே

**Verse 1**

Kadaiyavanea ennaik karunaiyinaal kalandu aandukonda
Vidaiyavanea vitthiduthi kandai ? viral vaenkaiyin thol
Udaiyavanea mannum uththara Kosa mangaikku arasea
Sadaiyavanea thaLarndhean empiraan ennait taangikollae

**பாடல் 6**

மறுத்தனன் யான், உன் அருள் அறியாமையின்,
என் மணியே;
வெறுத்து எனை நீ விட்டிடுதி கண்டாய்? வினையின் தொகுதி
ஒறுத்து, எனை ஆண்டுகொள்; உத்தரகோசமங்கைக்கு
அரசே,
பொறுப்பர் அன்றே பெரியோர், சிறு நாய்கள் தம்
பொய்யினையே?

**Verse 6**

Maruttanen yaan unarul ariyaamaiyin en maniyae
Veruttu ennai nii vitthiduthi kandai? vinaiyin toguthi
Oruthu ennai aandukol uththara Kosa mangaikku arasea
Poruppar anrea periyor siru naigal tam poyinayae.

---

## 24. வாழாப்பத்து
## VAZHAPATTHU

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்
பரனே பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்றருள் புரியாயே.



Parodu vinnayp paran^dha embarane
parrun^an marrilen kanday
Chirodu polivay chivaburaththarache
thirupperun^dhadhuraiyurai chivane
Arodu n^ogen arkkeduth thuraikken
andan^i arulilai yanal
Vargadal ulagil vazgilen kanday
varuga enrarul puriyaye.

## 25. அருட்பத்து
## ARUTPATTHU

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண்ணீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந்துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

Chodhiye chudare chuzoli vilakke
churichuzar panaimulai madandhai
Padhiye parane palgolvennirray
pangayath thayanuma lariya
Nidhiye chelvath thirupperundhuraiyil
niraimalark kurundhame viyachir
Adhiye adiyen adharith thazaiththal
adhendhuve en raru laye.

## 26. அச்சோப் பதிகம்
## ATCHOP PADHIGAM

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனைஆண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

Muththineri ariyadha murkkarodu muyalvenaip
Paththineri ariviththup pazavinaigal parumvannam
Sittamalam aruviththuch sivamaakki enaianda
Aththanenakku aruliyavaaru yaar peruvaar achchove

செம்மைநலம் அறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்தான்
நம்மையும்ஓர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மையெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே

Semmainalam ariyadha sidadharodhun thirivenai
Mummaimalam aruviththu mudhalaya mudhalvandhan
Nammaiyumor porulakki naychivigai erruviththu
Ammaiyenakku aruliyavaaru yaar peruvaar achchove

---

**தென்னாடுடைய சிவனே போற்றி!**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!**

**Thennadudaiya sivaney pohtri !**
**Ennattavarkum Iraiva pohtri !**



**ஓம் திருச்சிற்றம்பலம்**
**Aum Thirutchittrambalam**